Registered as a News Paper　பக்கங்கள் 04　விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　PEOPLES DAILY　மக்கள் தினசரி

நாதம்: 02　திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 14　(30-08-1991)　வெள்ளிக்கிழமை　ஓசை: 193


## 90,000 அரச ஊழியரை சேவையிலிருந்து நீக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

அரசாங்க சேவையிலுள்ள தொண்ணூறாயிரம் ஊழியர்களைச் சேவையிலிருந்து நீக்குவதற்கு இலங்கை பொது நிர்வாக அமைச்சு முயற்சி செய்துவருகின்றது. உலக வங்கியின் ஆலோசனைப்படி மேற்படி நடவடிக்கையையெடுப்பதற்கு இந்த அமைச்சு தீவிரமாக முயற்சிக்கின்றது. ஏற்கனவே இந்த அமைச்சு அறிமுகப்படுத்திய சுய விருப்பினடிப்படையிலான ஒய்வூதியத் திட்டத்தினால் அரசு எதிர்பார்த்த எண்ணிக்கையான ஊழியர்கள் ஒய்வெடுத்துக்கொள்ள முன்வரவில்லை. இதனால் மேற்படி எண்ணிக்கையான ஊழியர்களை அரச சேவையிலிருந்து நீக்குவதற்கு வேண்டிய புதிய நடைமுறை திட்டங்களை வகுப்பதில் பொது நிர்வாக (4 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா ஜனாதிபதி பதவி விலக' 125 பாராளு.உறுப்பினர் கோரிக்கை

## சிறிலங்காவில் அரசியல் நெருக்கடி

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மீது அரசியல் குற்றம் புரிந்ததற்காக பதவியில் இருந்து நீக்கப்படவேண்டும் எனக் கோரி சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர்கள் 125 பேர் கையொப்பம இட்டு மகஜர் ஒன்றைப் பாராளுமன்ற சபாநாயகரிடம் ஒப்படைத்துள்ளனர். இதில் கையொப்பம் இட்டவர்களில் ஆளும் ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினர்களும் எதிர்க்கட்சி தலைவர்களும் அடங்குவார்கள்.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை 'இம்பீச்சமண்ட்' எனப்படும் பழி மாட்டுறுதல் முறை மூலம் விசாரிக்கப்பட வேண்டும். இதன் பிரகாரம் பாராளுமன்றம் கூட்டப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். சிறிலங்கா பாராளுமன்றச் சபாநாயகர் எதிர்க்கட்சிகளின் இவ் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுள்ளார்.

சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்ட இம்மனுவில் சுமார் 125 உறுப்பினர்கள் வரையில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி பெரும்பான்மையை இழந்துள்ளது?

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். ... சிறிலங்கா ஜனாதிபதியைப பதவி நீக்கம் செய்யக் கோரும் ... தெரிவிக்கப்படுகிறது. இதனால் ஜனாதிபதி ஆர். பிரேம

## வீரவணக்கம்

ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் விடுதலைப்புலிகளைச் சேர்ந்த முகமது (விநாயகம் ஜெயபரன், அரசங்கேணி பளை) என்பவர் வீரமரணமடைந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் விழுப்புண்பட்டு வைத்திய சிகிச்சை பெற்று வந்த போராளியான றோய் (சொக்கலிங்கம் மதிவதனன், முல்லைத்தீவு) நேற்றுக் காலை வீர மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

இவர்கள் இருவருக்கும் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## தொழில் இழந்தோருக்கு முத்திரை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில்உள்ள தொழில் இழந்த உணவு முத்திரை இல்லாதவர்களுக்கு உணவு முத்திரையைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

தொழில் இழந்த அனைவருக்கும் உணவு முத்திரை மூலம் உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்கு வசதியாகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

தொழில் இழந்து இதுவரை (4 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் நள்ளிரவு குடியிருப்பு மீது குண்டுவீச்சு

(நமது நிருபர்)

மணலாறு மாவட்டத்தில் நள்ளிரவு வேளையில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங் ... கள் மக்கள் குடியிருப்புகள் மீது பதினைந்து பீப்பாக் குண்டுகளை வீசியது. இதனைத் தொடர்ந்து பீதிய

லலித், பிரேமச்சந்திரா

## இரு அமைச்சர்கள் பதவி இராஜினாமா

ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவின் அமைச்சரவையிலிருந்து இரு அமைச்சர்கள் தமது பதவிகளை நேற்று மாலை இராஜினாமாச் செய்துள்ளனர்

தொழில் அமைச்சர் ஜி. எம் பிரேமச்சந்திராவும், கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலியுமே பதவிகளை இராஜினாமாச் செய்தவர்களாகும்.

## ஜனாதிபதி பதவி நீக்கம் சிக்கல் நிறைந்த விவகாரம்

சிறிலங்கா அரசியல் அமைப்புச் சட்டப் பிரகாரம் ஜனாதிபதி மீது குற்றச்சாட்டு நடவடிக்கை எடுப்பதற்கு மூன்றில் இரண்டு பகுதி உறுப்பினரின் ஆதரவு மனுவுக்கு வேண்டும். அப்படிக் கிடைத்தாலும் மனுவை மீண்டும் உச்ச நீதிமன்று விசாரித்து தீர்ப்பு வழங்க வேண்டும். அப்படி உச்ச நீதிமன்று தீர்ப்பு வழங்கினாலும், அது மீளவும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பகுதி பாராளுமன்ற உறுப்பினரின் ஆதரவைப் பெறவேண்டும்.

## ஆறு வருடங்களாகியும் நிவாரணம் இல்லை

(அக்கரைப்பற்று)

கலவரங்களால் பாதிக்கப்பட்டு ஆறுவருடங்களாகியும் இன்றுவரை எதுவிதமான புனர்வாழ்வுக்கான கொடுப்பனவுகளோ உருப்படியான நிவாரணங்களோ ஆலையடி வேம்பு தமிழ் மக்களுக்கு வழங்கப்படவில்லை என கிராமோதய சபைத் தலைவர் புகார் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் கடந்த 1985ம் ஆண்டு ஏற்பட்ட தமிழ்-முஸ்லிம் கலவரத்தின் காரணமாக பல உயிரிழப்புக்களையும் சொல்லொணாத் துன்ப துயரங்களையும் அனுபவித்து வரும் ஆலையடி வேம்பு உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை 'இம்பீச்சமண்ட்' எனப்படும் பழி மாட்டுறைதல் முறை மூலம் விசாரிக்கப்பட வேண்டும். இதன் பிரகாரம் பாராளுமன்றம் கூட்டப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். சிறிலங்கா பாராளுமன்றச் சபாநாயகர் எதிர்க்கட்சிகளின் இவ் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுள்ளார்.

சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்ட இம்மனுவில் சுமார் 125 உறுப்பினர்கள் வரையில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி பெரும்பான்மையை இழந்துள்ளது?

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எதிரான தீர்மானத்தில் ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 43 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளார்கள்.

சிறிலங்கா ஜனாதிபதியைப பதவி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடந்தால் ஐ. தே. கட்சியைச் சேர்ந்த சுமார் 50 பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிராக வாக்களிப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பதவியிழக்க வேண்டிய சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகக் கொழும்பில் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றன.

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதிக்கு அமைச்சரவை முழு ஆதரவு வழங்கும்

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்ற அமைச்சர்கள் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு தமது முழு ஆதரவையும் தரப் போவதாக உறுதி கூறி உள்ளனர் என்று அமைச்சர் ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார்.

நேற்று நடந்த வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு - ரணில் விக்கிரமசிங்கா கூறினார்.

சிறிலங்கா அரசியல் யாப்பின் 38 வது பகுதி இரண்டாவது பிரிவு அ. ஆ வில் குறிப்பிட்ட சட்டதிட்டத்தின் படி பிரேமதாசாவை விசாரணை செய்ய வேண்டும்

(4ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்காஜனாதிபதிக்கு முப்படைகள் விசுவாசம் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் அரசியல் அமைப்பு உறுதியாகப் பின்பற்றப்படுமென்றும், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கும் ஜனநாயக ரீதியான அரசாங்கத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கும் சிறிலங்காவின் முப்படைத் தளபதியும் ஜனாதிபதியும் ஆகிய பிரேமதாசாவிற்கு சகல உதவியும் வழங்கப்படும் என்று இராணுவ, கடற்படை, விமானப்படை தளபதிகளும் பொலிஸ்மா அதிபரும் மக்களுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் உறுதியளித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று பத்திரிகைக்கு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் முப்படைத் தளபதிகளும் பொலிஸ்மா அதிபரும் விடுத்துள்ள அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

## அமைச்சர்கள், அதிகாரிகளை பிரேமா உடன் சந்திப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி தம் மீது பாராளுமன்றத்தில் குற்றச்சாட்டு மகஜர் சமர்பிக்கப்பட்டமை தெரிந்ததும் தமது அமைச்சரவையையும் இராணுவ கடற்படை, விமானப்

(4ஆம் பக்கம் பார்க்க)

...மடைந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் விழுப்புண்பட்டு வைத்திய சிகிச்சை பெற்று வந்த போராளியான றோய் (சொக்கலிங்கம் மதிவதனன், முல்லைத்தீவு) நேற்றுக் காலை வீர மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

இவர்கள் இருவருக்கும் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

...மூலம் உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்கு வசதியாகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

தொழில் இழந்து இதுவரை

(4ஆம் பக்கம் பார்க்க)

(அக்கரைப்பற்று)

கலவரங்களால் பாதிக்கப்பட்டு ஆறுவருடங்களாகியும் இன்றுவரை எதுவிதமான புனர்வாழ்வுக்கான கொடுப்பனவுகளோ உருப்படியான நிவாரணங்களோ ஆலையடிவேம்பு தமிழ் மக்களுக்கு வழங்கப்படவில்லை என கிராமோதய சபைத் தலைவர் புகார் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியில் கடந்த 1985ம் ஆண்டு ஏற்பட்ட தமிழ்-முஸ்லிம் கலவரத்தின் காரணமாக பல உயிரிழப்புக்களையும் சொல்லொணாத் துன்ப துயரங்களையும் அனுபவித்து வரும் ஆலையடி வேம்பு உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கே எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

இப் புகாரில் புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநலத்துறை அமைச்சின் நடமாடும் சேவையில் கடந்த மே மாதம் முறையீடு செய்யப்பட்டபோது கூடிய விரைவில் கொடுப்பனவுகள் துரிதப்படுத்தப்படுமென

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மணலாற்றில் நள்ளிரவு குடியிருப்பு மீது குண்டுவீச்சு

(நமது நிருபர்)

மணலாறு மாவட்டத்தில் நள்ளிரவு வேளையில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் மக்கள் குடியிருப்புகள் மீது பதினைந்து பீப்பாக் குண்டுகளை வீசியது. இதனைத் தொடர்ந்து பீதியடைந்த மக்கள் அப்பகுதிகளை விட்டு வெளியேறி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு 11 40 றகு கொக்கிளாய், நாயாறு பகுதிகளில் அவ்ரோ விமானங்கள் ஐந்து பீப்பாக் குண்டுகளை வீசின. சுமார்

(4ஆம் பக்கம் பார்க்க)

# கிட்டு லண்டனைவிட்டு வெளியேறி விட்டார்

(லண்டன்)

பிரித்தானியாவை விட்டு வெளியேறும்படி அந்நாட்டு உள்துறை அமைச்சினால் உத்தரவிடப்பட்ட சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) இப்போது ஐரோப்பிய நாடு ஒன்றுக்குச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது

கிட்டு அவர்கள் இந்த ஐரோப்பிய நாட்டிலேயே தங்குவார்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வெலிக்கந்த மோதலில் 6 இராணுவ. காணவில்லை

பொலநறுவை வெலிக்கந்த என்ற இடத்தில் உள்ள மாகா வெலியத்தன்னவுக்கு அருகில் கடந்த திங்கட்கிழமை புலிகளுடன் ஏற்பட்ட மோதலின் போது ஆறு இராணுவத்தினரைக் காணவில்லை என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இம் மோதலின்போது ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். ஒருவர் படுகாயமடைந்தார் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

# வவுனியாவில் மீண்டும் பெண்கள் மானபங்கம்

(வவுனியா)

வவுனியா சாந்தசோலைப் பகுதியில் மீண்டும் சிறிலங்கா இராணுவத்தினரால் தமிழ் இளம் பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டனர்.

27ஆம் திகதி இரவு சாந்த சோலையில் தங்கியிருந்த இளம் பெண்களில் 15 பேரை விசாரணைக்கென அழைத்துச் சென்ற இராணுவத்தினர் மூன்று இளம் பெண்கள் மீது பலாத்கார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி நடவடிக்கைக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் திடீர் தாக்குதலுக்கு மன்னாரில் 10 இராணுவம் பலி

மன்னார் மாவட்டத்தில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவ அணி ஒன்றின்மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர்த்தாக்குதலில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து வங்காலைப் பகுதியை நோக்கி கனரக வாகனங்களின் உதவியுடன் ரோந்து சென்ற இராணுவத்தினரை வழிமறித்து விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலின்போது பத்துப் படையினர் கொல்லப்பட்டதாகவும் நவீனரக ஆயுதங்களையும் கிரனைற்றுகளையும், றொக்கற்றுக்களையும் விடுதலைப் புலிகள் பயன்படுத்தியதாகவும் நேற்றுக் காலை கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பாதுகாப்புப் படை உயர் அதிகாரி எஸ். பி. முனசிங்கா தெரிவித்தார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## லெப்டினனட் தாசன்

(தேவலிங்கம்-அன்ரனிதாசன்)
மயிலிட்டி

வீர ஜனனம்
14.07.1970

வீர மரணம்
30.07.1991

30-7-91 அன்று காலை 10.30 மணிக்கு கட்டைக்காடு புல்லாவெளியில் சிறிலங்கா இராணுவத்துடன் நடந்த நேரடி மோதலில் வீரமரணம் அடைந்துள்ளார். இவருக்கு எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மானம் காத்த மறவர் குலத்திலே
மயிலை மண்ணிலே நீ பிறந்தாய்
தாசனே தமிழீழவீரனே
தன்மானப் போரிலே நீ
தலைவன் வழி நடந்து
தமிழீழம் அமைத்திடவே
கட்டைக்காட்டு புல்லா வெளியினிலே
கரையாத காவியமானாய்
நாட்கள் பல நகர்ந்தாலும்
நாளை மலரும் தமிழீழம் என
நம்பிக்கையுடன் உன் பணி
நாம் தொடர்வோம்!

-குடும்பத்தினர்
(B/2985)

## வரி விளம்பரம்

### ஆண்டு - 5
(புலமைப்பரிசில்)

(மாணவர்களைப் பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமான பயிற்சிப் பரீட்சை) தமிழ், கணிதம் பாடங்களுக்குரிய மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். அவற்றிற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடைகளுடன் திருத்திக் கொடுக்கப்படும்) BONDபுத்தகநிறுவனம். 58A, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.
(B-2983)

### O/L 90, 91 வாராந்த பயிற்சி மதிப்பீடு

விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்குரிய பகுதி I+II வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும், அதற்கு விடையளித்துத் தரும் பட்சத்தில் இலவசமாக விடையுடன் திருத்திக் கொடுக்கப்படும். BONDபுத்தக நிறுவனம். 58A, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
(B-2984)

### விற்பனைக்கு

சிங்கர் தையல் இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள் விற்பனைக்குண்டு திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: கௌரி தொழிலகம், 538, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(R/1654)

## 41-ம் நாள் ஆத்ம சாந்தி

### ஆராதனையும் மதிய போசனமும்

| வீரஜனனம் | | வீரமரணம் |
|---|---|---|
| 16 |  | 21 |
| -- | | -- |
| 11 | | 07 |
| -- | | -- |
| 1969 | | 1991 |

## மேஜர் சேரன்

(சண்முகம் றோய் செழியன்)
(கொழும்பு)

இவர் கட்டைக்காட்டில் வீரமரணம் அடைந்தார்.

விடியலுக்காய் விரைந்த வேங்கையே - அதனால்
கட்டைக்காட்டில் களப்பலியானவனே
வீரவரலாறு ஒன்று உனக்குண்டு
நீ காட்டிய சுவடுகள் இப்பாரினிலே
வழிகாட்டிச் செல்லும் ஓர் வரைபடம்
நீ காட்டிய சுதந்திரப் பாதையிலே
பயணங்கள் மீண்டும் தொடர்கின்றன.

34, பொலிஸ்நிலைய வீதி, சாவகச்சேரி. (R-1695) - உறவினர், நண்பர்கள்.

## கொழும்பிற்கு அம்புலன்ஸ் சேவை ஆரம்பிக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனை புதிதாக நோயாளர் அம்புலன்ஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்க இருக்கின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு செல்லவேண்டிய நோயாளர்களின் நலன் கருதி கொழும்புக்கான மேற்படி அம்புலன்ஸ் போக்குவரத்து சேவை விரைவில் ஆரம்பிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தற்பொழுது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புடன் கப்பல் மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் அதிகளவு நோயாளர்கள் மேலதிக சிகிச்சைகளை பெறும் வாய்ப்புக்களை தொடர்ந்தும் நீண்ட நாட்களாக இழந்து வருகின்றனர் இவ்வாறான நிலையைத் தவிர்ப்பதற்காகவே மேற்படி அம்புலன்ஸ் போக்குவரத்து சேவையை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க)

## வெளிநிலை விரிவுரைகள்

### கல்வியாண்டு 1991/1992

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பின்வரும் பட்டப் பாடநெறிகளுக்கான தமிழ் மொழி மூலமான விரிவுரைகள் 01-09-91 இல் ஆரம்பமாகின்றன.

★ கலை முதற்தேர்வு G A.Q.
★ வணிக முதற்தேர்வு (FIRST IN COMMERCE)
★ விஞ்ஞான முதற்தேர்வு (G.S Q. புள்ளிவிபரவியல்)

இப்பாட நெறிகளுக்கான விரிவுரைகளில் கலந்து கொள்வோருக்கான கல்வித் தகைமைகள்:-

க.பொ.த.ப. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.
விபரத்தினையும் விண்ணப்பப்படிவத்தினையும் ரூபா 10 செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவுத் திகதி 01-09-91

உதவிப் பதிவாளர்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(B/3031)

## முக்கிய அறிவித்தல்

## நிதர்சனம் நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. தகவல் சேகரிப்பாளர்கள்
2. தகவல் அலுவலர்கள்
3. செய்தியாளர்கள்
4. நிகழ்ச்சி மதிப்பீட்டாளர்கள்
5. அறிவிப்பாளர்கள்
6. விளம்பரம் சேகரிப்பாளர்கள்

அனுபவம் திறமை என்பவற்றிற்கேற்ப தகுந்த வேதனம் வழங்கப்படும்.

சுய விபரங்களுடன் 1991 - 09 - 05 இற்கு முன் தொடர்பு கொள்க.

'நிதர்சனம்'
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: மேலதிக விபரங்களை நிதர்சனம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (B/3025)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 20 |  | 17 |
| 01 | | 07 |
| 1924 | | 1991 |

## அமரர் திரு. நா. சோதிலிங்கம்

(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)

நல்லூரான் அடிதனிலே நாள்தோறும் குடைபிடித்து
நல்லூரான் நாமமதை நானிலத்தில் உள்ளவரை
நலமுடனே போற்றி வந்தீர்!
இப்போ நல்லூரான் சந்நிதியில் சேர்ந்துள்வீர் [என்பதனால்
உம் ஆத்ம சாந்திக்காக போற்றுகின்றோம்
போற்றுகின்றோம் நல்லூரானை!

கொக்குவில்.

சகோதரி திருமதி சிவயோகம் மூத்துராசா
உற்றார், உறவினர், நண்பர்கள்
(R/1696)

தலைவன் வழி நடந்து
தமிழீழம் அமைத்தி
டவே
கட்டைக்காட்டு புல்லா
வெளியினிலே
கரையாத காவியமா
னாய்
நாட்கள் பல நகர்ந்தா
லும்
நாளை மலரும்
தமிழீழம் என
நம்பிக்கையுடன் உன்
பணி
நாம் தொடர்வோம்!
-குடும்பத்தினர்
(B/2985)

## (சண்முகம் றோய் செழியன்)
### (கொழும்பு)

இவர் கட்டைக்காட்டில் வீரமரணம் அடைந்தார்.

விடியலுக்காய் விரைந்த வேங்கையே - அதனால்
கட்டைக்காட்டில் களப்பலியானவனே
வீரவரலாறு ஒன்று உனக்குண்டு
நீ காட்டிய சுவடுகள் இப்பாரினிலே
வழிகாட்டிச் செல்லும் ஓர் வரைபடம்
நீ காட்டிய சுதந்திரப் பாதையிலே
பயணங்கள் மீண்டும் தொடர்கின்றன.

34, பொலிஸ் நிலைய வீதி,
சாவகச்சேரி.
(R-1695)
- உறவினர்,
நண்பர்கள்.

## பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(B/3031)

நல்லூரான் அடிதனிலே நாள்தோறும் குடைபிடித்து
நல்லூரான் நாமமதை நானிலத்தில் உள்ளவரை
நலமுடனே போற்றி வந்தீர்!
இப்போ நல்லூரான் சந்நிதியில் சேர்ந்துள்ளீர்
[என்பதனால்
உம் ஆத்ம சாந்திக்காக போற்றுகின்றோம்
போற்றுகின்றோம் நல்லூரானை!

சகோதரி திருமதி சிவயோகம்
கொக்குவில். முத்துராசா
உற்றார், உறவினர், நண்பர்கள்
(R/1696)

வலி. கிழக்கு தெ ப. ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி.

## பதவி வெற்றிடம்
### தட்டெழுத்தாளர் தமிழ், ஆங்கிலம்
### சம்பள அலகு 305. 13

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்டத்தில் வசிக்கும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி 15.09.91 ஆகும். விண்ணப்பப் படிவங்களை ரூபா 5/- செலுத்தி தலைமைக்கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் பொதுமுகாமையாளர் வலி. கிழக்கு தென், பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி என்ற முகவரிக்கு நேரடியாகவோ, அன்றேல் பதிவுத் தபால் மூலமோ அனுப்பப்படல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

01. தட்டெழுத்தாளர் சம்பள அலகு 305. 13
சம்பள அளவுத் திட்டம் 730 1055
20x102;5x5

வயதெல்லை 18-30 வருடங்கள் (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.)

கல்வித்தகைமை: 6 பாடங்களில் சித்தியுடன் கூடிய க. பொ. த. ப. (சா. த) சித்தியும், தமிழ் தட்டச்சில்/சிங்கள தட்டச்சில் நிமிடத்துக்கு 20 சொற்கள் ஆங்கில தட்டச்சில் நிமிடத்திற்கு 30 சொற்கள் கதியும் இருத்தல் வேண்டும்.

(சுற்றறிக்கை இல. 108/81ன் பிரகாரம்)

நீர்வேலி
26-08-1991
(B/3021)
— பொதுமுகாமையாளர்

## முக்கிய அறிவித்தல்

செய்தித்தகவல் மையத்தின் செய்தியாளர்களுக்கான கலந்துரையாடல், 31-08-91 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எமது செய்தியாளர்கள் அனைவரையும் இக்கலந்துரையாடலுக்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

செய்தித் தகவல் மையம்,
கோப்பாய்.
இப்படிக்கு
நிர்வாகி
(B/3029)


உலகம் முழுவதுக்குமான

DHL
WORLDWIDE EXPRESS

துரித
## தபால் சேவை
உங்கள் கடிதங்களை ஒப்படையுங்கள்

## DHL INTERNATIONAL
C/o. COSMOS MARKETING SERVICES,
12C, K. K. S. Road, JAFFNA.
(B/3028)


## நினைவு கூருகின்றோம்...

## 1991-08-30

1989ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டக்களப்பு, சேனைக்குடியிருப்பு பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது காயமுற்ற நிலையில் தனது கைக்குண்டைத் தானே வெடிக்க வைத்து வீரமரணமெய்திய

**2ஆம் லெப். ஜெயம்** (கிருஷ்ணபிள்ளை ஜீவரத்தினம் - வீரமுனை, சம்மாந்துறை)

கோண்டாவிலில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**நீக்கிறோ** (சபாரட்ணம் - செட்டிகுளம்)

1990 ஆம் ஆண்டு வந்தாறுமூலை பல்கலைக் கழக அகதிமுகாமில் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்

ஐயங்கேணிப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்த் தம்பதியினர்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(B/3020)
- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

# போல்டிக் குடியரசுகளை அங்கீகரிப்பதில் அமெரிக்கஜனாதிபதி சிறிது தயக்கம்



ஜோர்ஜ் புஷ்

சோவியத் யூனியனில், தோல்வியில் முடிந்த சதிப் புரட்சியால் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரதன்மையைத் தொடர்ந்து குடியரசுகள் ஒன்றின் பின் ஒன்றாகச் சுதந்திரப் பிரகடனம் செய்து வருகின்றன. இக்குடியரசுகளில் சில சதிப் புரட்சிக்கு முன்னரே சுதந்திரப் பிரகடனம் செய்திருப்பினும் தற்பொழுது அவற்றை அமுலாக்குவதில் தீவிர கவனம் செலுத்துகின்றன.

சதிப் புரட்சிக்கு முன்னரே சோவியத் குடியரசுகளில் இருந்து பிரிந்து செல்வதற்கான தீவிர முயற்சியில் போல்டிக் குடியரசுகளான லித்வேனியா, எஸ்தோனியா, லட்வியா என்பன தீவிரகவனம் செலுத்திவந்தன. அக்குடியரசுகளின் பாராளுமன்றங்களும் சுதந்திரப் பிரகடனம் செய்திருந்தன. இக்குடியரசுகளுடன் ஜோர்ஜியா, உக்ரெயின், ஆர்மினியா என்பனவும் பிரிந்து செல்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தன.

ஆனால், போல்டிக் குடியரசுகள் எதிர்பார்த்தது போன்று அமெரிக்காவினதும் மேற்கு உலகினதும் நேரடி அங்கீகாரம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. கொர்பசேவின் பெரஸ்ரொய்காவும், கிளாஸ்ட் நொட்சும் மறுசீரமைப்பிற்கும், மாற்றங்களுக்கும் வழிசெய்ததாயினும் கம்யூனிஸ்ட் கட்சியில் தீவிர

இந்நிலையில், கொர்பசேவையும் பேணி, அவருக்கு அழுத்தம் கொடுக்கக் கூடிய 'ஜனநாயகசக்தி'களையும்பேணவே அமெரிக்கா விரும்பியது.

இதன் வெளிப்பாடாகவே தேசிய இனங்களின் போராட்டங்களுக்கு அமெரிக்கா தனது நேரடியான ஆதரவை வழங்க முன்வரவில்லை. இத்தனைக் கடந்த மாத இறுதியில் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேரடியாகவே அறிவித்தார். உக்கிரெயின் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் சோவியத் குடியரசுகள் பிரிந்து செல்வதற்கு அமெரிக்கா ஆதரவளிக்காது எனவெளிப்படையாகத் தெரிவித்தார்.

## சதியைத் தொடர்ந்து மாற்றம்

ஆனால், கடந்த வாரத் தொடக்கத்தில் நிகழ்ந்த சதிப்புரட்சியைத் தொடர்ந்து சோவியத்தின் நிலையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன இதுவரை மேற்குலகத்தவரின் கண்ணில் அச்சமூட்டும் சக்தியாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சி சிதைந்து போனது. சோவியத் யூனியனில் கட்சிக்குத் தடையும் விதிக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட ஸ்திர மின்மை குடியரசுகளைச் சுதந்திர அரசுகளாகப்பிரகடனம் செய்யும் நிலையைத் தோற்றுவித்தன.

பதினைந்து குடியரசுகளில் ஏழு குடியரசுகள் சுதந்திரப் பிரகடனம் செய்தன. போல்டிக் குடியரசுகளான மூன்றும் உக்ரெயின், மொல்டேவியா, பைலோ - ரஷ்யா, உஷ்பெக்கிஸ்தான் என்பன சுதந்திரப் பிரகடனம் செய்தவையாகும். இதில் போல்டிக் குடியரசுகளை ஒன்றன்பின் ஒன்றாக அமெரிக்கா தவிர்ந்த மேற்குலகம் அங்கீகரித்துள்ளன. ஏனைய குடியரசுகளில் ஒன்றான மொல்டேவியாவை ரூமேனியா அங்கீகரித்துள்ளது

மீண்டும் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி கொர்பசேவ் தான் முன்னர் தாமதப்படுத்தி வைத்திருந்த சீர்திருத்த நடவடிக்கைகள் யாவற்றையும் விரைவு படுத்தப் போவதாக அறிவித்துள்ளார். இந்த சீர்திருத்தங்கள், அரசியல், பொருளாதார இராணுவ அமைப்புக்கள் யாவற்றிலும் மேற்கொள்ளப்படவுள்ளன. இச்சீர்திருத்தங்களுக்கு ஏற்ப புதிய அமைச்சரவையை அமைப்பதற்கும் முயற்சி எடுத்து வருகின்றார். பழைய அமைச்சரவை கலைக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைக்குச் சென்றது அதில் வெற்றியும்கிடைத்துள்ளது. சோவியத்ஒன்றியத்துடன் ஏதோவிதத்தில் இணைந்திருக்க உக்ரெயின் சம்மதம் தெரிவித்துள்ளது.

## யெல்சினின் எச்சரிக்கை

அதேவேளை, ரஷ்யக்குடியரசு தலைவர் பொரிஸ்யெல்சின் போல்டிக் குடியரசுகளை அங்கீகரித்தாலும் சில மறைமுகஎச்சரிக்கைகளையும் அவற்றிற்குவிட அவர் தவறவில்லை. ஏனையகுடியரசுகளில் உள்ள ரஷ்யமக்களின் பாதுகாப்பை

> கொர்பசேவை அசட்டை செய்து போல்டிக் குடியரசுகளை அங்கீகரிப்பது சோவியத்துடனான உறவில் கசப்புணர்வுகளை ஏற்படுத்தும் என்பதை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் உணர்ந்துள்ளார். அத்தோடு போல்டிக் குடியரசுகளுக்கு உலக அங்கீகாரமும். பாதுகாப்பும் அமெரிக்காவால் உடன் பெற்றுக் கொடுக்க முடியுமா என்பதும் சந்தேகமே.

## பிரிவதை கொர்பி விரும்பவில்லை

ஜனாதிபதி கொர்பசேவ் சோவியத் குடியரசுகளில் அங்கம்வகித்த குடியரசுகளின் சுயநிர்ணய உரிமையினை அங்கீகரித்தாலும் அவை தனி அரசுகளாகப் பிரிந்து செல்வதை அவர் விரும்பவில்லை.

சோவியத் யூனியனுக்கு புதிய யூனியன் அமைப்பு முறை ஒன்று உருவாக்கப்படவேண்டும். அதில் அரசியல் பொருளாதார இறையாண்மை பெற்ற குடியரசுகளின் கூட்டாட்சி ஒன்று ஏற்

தமது குடியரசு எப்பொழுதும் கவனத்திற் கொள்ளும் என அவர் எச்சரித்துள்ளார். போல்டிக் குடியரசுகளான எஸ்தோனியாவில் 27.9 வீதமும், லட்வியாவின் 32 8 வீதமும், லித்வேனியாவில் 8 6 வீதமும் ரஷ்யர்கள் உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் பெரும்பாலானவர்கள் குடியேற்றவாசிகளாவர்.

மேலும் சோவியத்யூனியனில் உள்ள அணுவாயுதக் குவியலுக்கும், வீட்டோ அதிகாரத்திற்கும்ரஷ்யக்குடியரசே

> போல்டிக் குடியரசுகள் மூன்றும் ஒரே மாதிரியான சரித்திரப் பின்னணியைக் கொண்டவை. 1922 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் உருவாகியபோது இவை மூன்றும் சுதந்திர நாடாக இருந்தன இரண்டாம் உலக மகா யுத்தம் ஆரம்பமாவதற்கு (1939 செப்டெம்பர்) முன்னர் ஜேர்மனியும் சோவியத் ஒன்றியத் தலைமையும் செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தமாகிய மொலோ ரோவ் - றிபன்

தும் குறையவில்லை. தற்பொழுது சோவியத் குடியரசுகள் பதினைந்தும் எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் சோவியத் இராணுவமே ஈடுபட்டுவருகின்றது. மேலும் அரசியல். பொருளாதாரச் சீர்திருத்தங்களும், மாற்றங்களும் அறிவிக்கப்பட்டது போன்று இராணுவத்தில் பெரும் அடிப்படை மாற்றங்கள் எவையும் இதுவரையிலும் அறிவிக்கப்படவுமில்லை.

## அமெரிக்காவிற்கு ஏற்பட்ட சிக்கல்

இவ்வாறான தொரு சூழ்நிலையில்தான் அமெரிக்கா போல்டிக் குடியரசுகளின் சுதந்திரப் பிரகடனங்களை அங்கீகரிப்பதைப் பற்றி தீவிர ஆலோசனையின் பின்பே முடிவுகள் எடுக்க வேண்டிய நிலையில் உள்ளது. ரஷ்யக் குடியரசு ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் பால்டிக் குடியரசுகளை அங்கீகரித்தாலும் சோவியத் ஜனாதிபதியான கொர்பசேவ் அதனை அங்கீகரிக்காமை அமெரிக்காவிற்கு நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது. கொர்பசேவையும் மீறி போல்டிக் குடியரசுகளை அமெரிக்கா அங்கீகரிக்கும் பட்சத்தில் சோவியத்யூனியனில் ஜனநாயகச்சீர்திருத்தங்கள், மனித உரிமைகள் மீறல்கள் என்பனவற்றைவிட சோவியத்தைப் பிளவுபடுத்துவதையே அமெரிக்காகுறிக்கோளாகக் கொண்டிருந்தது என்ற உண்மையை நேரடியாக ஏற்றுக்கொள்ள வேண்டிவரும்.

அத்தோடு போல்டிக் குடியரசுகளை உலக அங்கீகாரத்தைப் பெறுதல் என்பதும் இலகுவான காரியமாக இருக்காது ஏனெனில் தேசிய இனப் போராட்டங்களுக்கு முகம் கொடுக்கும் மூன்றாம் உலக நாடுகளில் அங்கீகாரம் குறைவாகவே கிடைக்கப் பெறும் வாய்ப்புக்கள் உண்டு என்ப



கொர்பசேவ்

தோடு ஐ. நாவில் சோவியத் யூனியன் அவற்றிற்கு எதிராக வீட்டோ அதிகாரங்களைப் பயன்படுத்தக் கூடிய நிலை உருவாகும். இதற்குச் சீனாவும் உதவலாம்.

அடுத்ததாக போல்டிக் குடியரசுகளுக்கு தமது எல்லைகளைப் பாதுகாப்பதற்கான பலம் உடன் ஏற்பட்டுவிடப் போவதில்லை. சோவியத் இராணுவம் எந்நேரமும் அவற்றைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரலாம். தற்போதைய நெருக்கடிச் சூழ்நிலை சற்றுத் தணிந்திருந்தும் அவ்வாறானதொரு சூழ்நிலை உருவானது என அறுதியிட்டுக் கூற முடியாது. அவ்வாறு ஒரு நிகழ்வு ஏற்படுமானால் அமெரிக்காவில் நேரடியாக போல்டிக் குடியரசுகளின் எல்லைகளைப் பாதுகாப்பதற்கு உதவி அளிக்க முடியாது என்பதே உண்மை.

இந்நிலையில் போல்டிக் குடியரசுகளின் சுதந்திரப் பிரகடன அங்கீகாரத்தை அமெரிக்கா அவசரப்பட்டு மேற்கொண்டு சிக்கலில் மாட்டிவிட எண்ணவில்லைப்போல் தெரிகின்றது. ஆனால் அமெரிக்க கூட்டாளிகள் போல்டிக் குடியரசுகளை அங்கீகரித்தமை அமெரிக்காவை விரைவில் அங்கீகாரம் நோக்கித் தள்ளக் கூடும்.

ஆனால் இந்த அங்கீகாரம் சோவியத் அமெரிக்க உறவில் கொர்பசேவ் ஏற்படுத்திய ஒரு சுமுகமான நிலைக்கு குந்தகமாக அமையும் என்று மட்டும் உறுதியாகக் கூறலாம்.

# சட்ட பூர்வ அரசாங்கம்

ரெயின், ஆர்மினியா என்பனவும் பிரிந்து செல்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தன.

ஆனால், போல்டிக் குடியரசுகள் எதிர்பார்த்தது போன்று அமெரிக்காவினதும் மேற்கு உலகினதும் நேரடி அங்கீகாரம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. கொர்பசேவின் பெரஸ்ரொய்காவும், கிளாஸ்ட் நொட்சும் மறுசீரமைப்பிற்கும், மாற்றங்களுக்கும் வழிசெய்ததாயினும் கம்யூனிஸ்ட் கட்சியில் தீவிர போக்குடையவர்களினதும் இராணுவத்தினதும் கை பலமான நிலையிலேயே இருந்தது. இந்நிலையில் சோவியத் குடியரசுகளின் பிரிவினைக்கு நேரடியாக ஆதரவு அளிப்பதென்பது கொர்பசேவை நெருக்கடிக்குள் நேரடியாகத் தள்ளிவிடுவதாக அமைந்துவிடும்.

கொர்பசேவ் ஆட்சியில் இருக்கும் வரையில் தான் சோவியத் யூனியனில் மாற்றங்களைக் கொண்டுவரலாம் என்பதைப்புரிந்திருந்த மேற்குலகம் ரஷ்யக் குடியரசின் தலைவர் பொரிஸ் யெல்சின் மூலம் கொர்பசேவிற்கு மாற்றத்திற்கான நெருக்கடியைக் கொடுக்கத் தலைப்பட்டன. இந்நிலையில் பொரிஸ் யெல்சின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற ரீதியில் அவருக்கான ஆதரவையும் மேற்குலகம் வழங்கிவந்தது.

அதாவது அமெரிக்காவும் மேற்குலகமும் கொர்பசேவைத் தவிர்த்துவிட்டு அதிகாரத்தில் இருந்தகம்யூனிஸ்ட் கட்சியையும், ஜனநாயகம் கோரி போராட முன்வந்த சக்திகளையும் நேருக்கு நேர் மோதவிட முன்வரவில்லை. ஏனெனில் அதிகாரத்தில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சியும் அவற்றுடன் பின்னிப்பிணைக்கப்பட்டிருந்த உளவு நிறுவனமான கே. ஜி. பி யும் கட்டுக்குலையாமல் சோவியத் இராணுவம் இருந்ததுமேகாரணமாகும். அதற்கு சீனாவில் தியென்மன்சதுக்கத்தில்நடந்த படுகொலைகள் நல்ல படிப்பினையாகும்.

வைத் தெரிவித்தன.

பதினைந்து குடியரசுகளில் ஏழு குடியரசுகள் சுதந்திரப் பிரகடனம் செய்தன. போல்டிக் குடியரசுகளான மூன்றும் உக்ரெயின், மொல்டேவியா, பைலோ - ரஷ்யா, உஷ்ப்பெக்கிஸ்தான் என்பன சுதந்திரப் பிரகடனம் செய்தவையாகும். இதில் போல்டிக் குடியரசுகளை ஒன்றன்பின் ஒன்றாக அமெரிக்கா தவிர்ந்த மேற்குலகம் அங்கீகரித்துள்ளன. ஏனைய குடியரசுகளில் ஒன்றான மொல்டேவியாவை ருமேனியா அங்கீகரித்துள்ளது ஏனைய குடியரசுகளை இதுவரை நாடுகள் எதுவும் அங்கீகரிக்கவில்லை. அதேவேளை போல்டிக் குடியரசுகளின் சுதந்திரப் பிரகடனத்தை ரஷ்யக் குடியரசின் தலைவர் பொரிஸ்யெல்சினும் அங்கீகரித்துள்ளார்.

## அமெரிக்கா அங்கீகரிக்கவில்லை

மேற்குலகம் போல்டிக் குடியரசுகளை அங்கீகரித்துள்ள போதும் அமெரிக்கா இன்னமும் போல்டிக் குடியரசுகளை அங்கீகரிக்கவில்லை. போல்டிக் குடியரசுகளை அமெரிக்கா அங்கீகரிக்கும் சூழ்நிலை உருவாகிவருவதாக அமெரிக்க அரசியல் வட்டாரங்களில் இருந்து கருத்துக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்ற போதிலும் அமெரிக்க அரசுத் தலைவர் ஜோர்ஜ்புஷ் இதற்குச் சிறிது காலம் கடத்தியே வருகின்றார். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் போல்டிக் குடியரசுகளுக்கு தமது எல்லைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றுள்ளனவா என்பதையும் மொஸ்கோவின் அரசியல் ஸ்திரத் தன்மையையும் அடிப்படையாகக் கொண்டே இந்த அங்கீகாரத்தை வழங்கலாம் என எதிர்பார்க்கின்றார். இல்லாவிடில் அதனால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளுக்கு அமெரிக்கா நேரடியாக முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுவிடும்.

## தீவிர சீர்திருத்தம்

சோவியத் யூனியனின் சதிப்புரட்சி முறியடிக்கப்பட்டு புதிய யூனியன் அமைப்பு முறை ஒன்று உருவாக்கப்படவேண்டும். அதில் அரசியல் பொருளாதார இறையாண்மை பெற்ற குடியரசுகளின் கூட்டாட்சி ஒன்று ஏற்பட வேண்டும் - என்றே கருதுகின்றார் அவ்வாறு இல்லாது போனால் தான் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகப் போவதாகவும் அவர் எச்சரித்துள்ளார். கொர்பசேவின் இந்த எச்சரிக்கை சோவியத் குடியரசுகளுக்கு விடுக்கப்பட்டது என்பதைவிட மேற்குலகிற்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை என்றே சொல்லலாம். இதன் மூலம் சோவியத் குடியரசுகளை அவசரம் அவசரமாக அங்கீகரிப்பதை மேற்குலகம் நிறுத்த வேண்டும் என்பதே அவர் எதிர்பார்ப்பாகும். மேலும், போல்டிக் குடியரசுகளையும் மேற்குலக நாடுகள் அவசரப்பட்டு அங்கீகரித்ததையும் அவர் குறை கூறியுள்ளார்.

ரஷ்யக்குடியரசின் ஜனாதிபதி பொரிஸ்யெல்சின் போல்டிக் குடியரசுகளை அங்கீகாரம் செய்ததையும் கண்டித்துள்ளார்.

மேலும் குடியரசுகளாகப் பிரகடனம் செய்த குடியரசுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுதந்திரப்பிரகடனத்தைப்பிற்போடுமாறும் கோரும் முயற்சியிலும் இறங்கியுள்ளார். இதன் முதல் கட்ட நடவடிக்கையாக உக்ரெயின் தலைநகருக்கு ஒரு குழு

களில் பெரும்பாலானவர்கள் குடியேற்றவாசிகளாவர்.

மேலும் சோவியத்யூனியனில் உள்ள அணுவாயுதக் குவியலுக்கும், வீட்டோ அதிகாரத்திற்கும்ரஷ்யக்குடியரசே வாரிசு எனவும் ரஷ்யக்குடியரசின் தலைவர் பொரிஸ் யெல்சின் தெரிவித்துள்ளார். இந்நிலையானது பதினைந்து குடியரசுகளிடம் பரவியிருந்த அணுவாற்றலானது ரஷ்யக் குடியரசிடம் தனியாகச் சென்றடையும் ஒரு நிலையை உருவாக்கி விடக்கூடியதுமாகும்.

அத்தோடு ரஷ்யக்குடியரசுத் தலைவர் சதிப்புரட்சியின் முன்னர் இருந்த நிலையை விட தற்பொழுது ஜனாதிபதி கொர்பசேவ்வுடன் சற்றுக் கூடுதலாக ஒத்துழைத்தும் வருகின்றார்.

பொரிஸ்யெல்சினின் போக்கில் ஏற்பட்டமாற்றத்திற்கு கொர்பசேவ் இல்லாவிடில் தான் உருவாகி இருக்க முடியாது என்பதோடு. சோவியத் யூனியனின் எல்லைகள் வெகுவாகச் சுருங்கி விடும் என்பதை உணர்ந்துள்ளமையே ஆகும்.

## இராணுவத்தில் மாற்றம் குறைவு

அதேவேளை, சோவியத்தில் ஏற்பட்ட சதிப்புரட்சியில் இராணுவத் தலைமைப்பீடம் ஓரளவு பங்கு ற்றியிருப்பினும் சோவியத்இராணுவத்தின் உள்ளார்ந்த வளம் தற்பொழு

> போல்டிக் குடியரசுகள் மூன்றும் ஒரே மாதிரியான சரித்திரப் பின்னணியைக் கொண்டவை. 1922 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் உருவாகியபோது இவை மூன்றும் சுதந்திர நாடாக இருந்தன இரண்டாம் உலக மகா யுத்தம் ஆரம்பமாவதற்கு (1939 செப்டெம்பர்) முன்னர் ஜேர்மனியும் சோவியத் ஒன்றியத் தலைமையும் செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தமாகிய மொலோரோவ் - றிபன்றேப் ஒப்பந்தம் மூலம் இப்போல்டிக் குடியரசுகள் சோவியத் யூனியனுக்கு எனவும், போலந்து ஜேர்மனிக்கு எனவும் பங்கு போடப்பட்டது இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் 1940 இல் போல்டிக் குடியரசுகளுக்குள்புகுந்த சோவியத் இராணுவம் அவற்றை சோவியத்துடன் இணைத்துக் கொண்டது போலந்திற்குள் ஜேர்மனி இராணுவம் புகுந்து போலந்தை தம்முடன் இணைத்துக் கொண்டது.

நேரடியாக ஏற்றுக்கொள்ள வேண்டிவரும்.

அத்தோடு போல்டிக் குடியரசுகளை உலக அங்கீகாரத்தைப் பெறுதல் என்பதும் இலகுவான காரியமாக இருக்காது ஏனெனில் தேசிய இனப் போராட்டங்களுக்கு முகம் கொடுக்கும் மூன்றாம் உலக நாடுகளில் அங்கீகாரம் குறைவாகவே கிடைக்கப் பெறும் வாய்ப்புக்கள் உண்டு என்ப

கூட்டாளிகள் போல்டிக் குடியரசுகளை அங்கீகரித்தமை அமெரிக்காவை விரைவில் அங்கீகாரம் நோக்கித் தள்ளக் கூடும்.

ஆனால் இந்த அங்கீகாரம் சோவியத் அமெரிக்க உறவில் கொர்பசேவ் ஏற்படுத்திய ஒரு சுமுகமான நிலைக்கு குந்தகமாக அமையும் என்று மட்டும் உறுதியாகக் கூறலாம்.

# சட்ட பூர்வ அரசாங்கம் மீளவும் ஏற்பட்டுவிட்டது

### கொர்பசேவ் இந்தியாவிற்கு அறிவிப்பு

(டில்லி)

மாஸ்கோவில் சட்ட பூர்வமான அரசாங்கம் மீளவும் ஏற்படுத்தப்பட்டு விட்டது என்ற கடிதம் இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு ஜனாதிபதி கொர்பசேவ் அனுப்பி வைத்துள்ளார்.

சென்ற வாரம் தோல்வியில் முடிந்த திடீர் புரட்சியை நடத்திய எட்டு உறுப்பினர் நெருக்கடி நிலைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் எந்த நடவடிக்கையும் செல்லுபடியாகாது என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் புதுடில்லியில் தெரிவித்தார்.

# நாணயப் பெறுமதிக்கு ஏற்ப விலைகள் இல்லை

இந்திய நாணயத்தின் பெறுமதி குறைக்கப்பட்ட போதும், இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகளின் விலைகள் இலங்கையில் குறைக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

மூன்று ரூபா (இந்திய) புத்தகம் பத்து ரூபாவாகவும், ஆறு ரூபா புத்தகம் இருபத்திரண்டு ரூபாவிற்கும் விற்கப்படுகின்றன.

ஆனால் வேறு இந்தியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதுடன், அந்நியச் செலாவணியாக அனுப்பப்படும் பணமும் பெறுமதி இறக்கத்திற்கு ஏற்ப வழங்கப்படுகின்றது.

# யாழ். மாவட்டத்தில் 1,200 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

யாழ் மாவட்டத்தில்கடந்த ஒரு வருடத்தில் மட்டும் 1 200பேர் உயிரிழந்துள்ளதாக யாழ். செயலகத்தால் செய்யப்பட்ட மதிப்பீடு ஒன்று தெரிவிக்கின்றது.

இதுபற்றி செயலகப் புனர்வாழ்வுப் பகுதியில் உயிரிழப்புக்கான நட்டஈடுகோரி 1,200 விண்ணப்பங்கள் தமக்கு வந்து சேர்ந்துள்ளன என்று கூறப்பட்டது

இதேவேளை இந்தக் காலப் பகுதியில் இறந்தோருக்கான தொகை மேலும் அதிகமாகவே இருக்கும் என்றும் கூறப்பட்டது.

# காஷ்மீர் இந்திய நிலைகள் மீது பாக். பீரங்கித்தாக்குதல்

(டில்லி)

ஜம்மு காஷ்மீரில் பூஞ்ச் அருகில் இந்திய நிலைகளின் மீது பாகிஸ்தானிய இராணுவத்தினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர் என இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை பூஞ்சில் இருக்கும் இந்திய நிலைகளின் மீது முதலாவது பீரங்கித் தாக்குதலை பாகிஸ்தானிய இராணுவத்தினர் தொடுத்திருந்தனர்.

மீண்டும் நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாக பீரங்கித் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

ஆனால் இந்தியத் தரப்பில் உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படாத போதிலும் நேற்று மதியம் வரை அப்பிரதேசத்தில் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜம்மு காஷ்மீர் வழியாக தீவிரவாதிகள் இந்தியாவிற்குள் நுழைவதற்காகவே பாகிஸ்தான் பீரங்கித் தாக்குதல் நடத்தியதாக இந்தியா தெரிவித்துள்ளது.

அதே வேளை இந்திய இராணுவத்தினர்தான் பாகிஸ்தான் நிலைகளைத் தாக்கி வருவதாக பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# இந்தியாவின் உள்விவகாரத்தில் பாக். தலையிட வேண்டாம்

(டில்லி)

இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக்கூடாது என்று இந்தியா பாகிஸ்தானைக் கேட்டுள்ளது.

இந்தியாவிற்கு எதிராகப் பகைமைப் பிரசாரத்தில் ஈடுபட வேண்டாம் என்றும், உள் விவகாரத்தில் தலையிட வேண்டாம் என்றும் இந்தியா பாகிஸ்தானைக்கேட்டுள்ளது.

காஷ்மீர் விடயத்தில் இந்தியாவுக்கு எதிரான பிரசாரத்தைத் தீவிரப்படுத்துமாறு பாகிஸ்தான் பிரதம மந்திரி நவாப்ஷெரிப்பின் உயர் ஆலோசகர் ஒருவர் வெளிநாட்டுப் பாகிஸ்தானிய தூதரகங்களைக் கேட்டுக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமென்று இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவசிங் சோலங்கி நேற்று லோக் சபையில் தெரிவித்தார்.

ஜம்மு-காஷ்மீர் நிலைமை பற்றிச் சரியானதோற்றத்தை எடுத்துக் காட்ட தகுந்த நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொள்ளுமென்று சபையில் அமைச்சர் உறுதியளித்தார்,

இந்தியாவின்ஒருங்கிணைந்த பகுதியான ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாத சீர்குலைவு நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் ஆதரவு அளித்து வருவது குறித்து சர்வதேச சமுதாயத்திடம் தெரிவிக்கப்பட்டதாக அமைச்சர் சோலங்கி கூறினார்.

## இந்தியா கோரிக்கை

பாகிஸ்தானின் நடவடிக்கை சிம்லா ஒப்பந்தத்தையும், நாடுகளுக்கிடையிலான நடத்தை நெறிகளையும் மீறிய செயலாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்

### கிட்டு

என்பதை உறுதி செய்ய முடியாது என்று லண்டனில் புலிகள் தரப்பில் சொல்லப்பட்டது.

கிட்டு பிரித்தானியாவை விட்டு வெளியேறியதை உள்துறை அமைச்சின் துணைத் தகவல் அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார்.

கிட்டுவின் அரசியல் வதிவிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது அவரது வழக்கறிஞரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் இனிமேல், பிரித்தானியாவுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் என்றும் இந்த அதிகாரி கூறினார்.

பிரிட்டனைவிட்டு வெளியேறியதன் மூலம் நடுநிலை ஆலோசகர் குழுவிற்கு மனுச் செய்யும் உரிமையைக கிட்டு இழந்துவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### சிறிலங்கா

கைச்சாத்திட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. அதே வேளை சிலஎதிர்க்கட்சி உறுப்

## தற்காலிகமாக 11 தொழிலாளர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலைக்குத் தற்காலிக சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக பதினொரு பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அங்கு நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குப் பலர் தோற்றிய போதிலும் பதினொரு பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டனர்.

இதன் மூலம் போதனா வைத்தியசாலையில் நீண்டகாலமாக இருந்து வந்த மேற்படி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார் (ச)

# அத்தியாவசிய பொருள்கள் விற்பனை செய்ய முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு கப்பல் மூலம் எடுத்து வரப்படும் அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்வதற்கு புனர்வாழ்வு அமைச்சு முடிவு செய்திருக்கின்றது.

இம் மாவட்டத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புடன் எடுத்து வரப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களில் இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோகத்தையும், உணவு முத்திரைக்கான விநியோகத்தையும் மேற்கொண்டு மிகுதியாக உள்ள அத்தியாவசிய உணவுப் பொருள்களை கூட்டுறவுச் சங்கங்களினூடாக விற்பனை செய்வதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. (க)

### தொழில்

உணவு முத்திரைத் திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளப்படாத மக்களுக்கும் உணவு முத்திரைத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. (க)

### வவுனியாவில்

உட்படுத்தப்பட்ட பெண்கள் காயங்களுடன் காணப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முதல் நாளும் ஆறு பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர் என்பது தெரிந்ததே. (தி)

### பாராளுமன்ற

சிறிலங்கா ஜனாதிபதி பதவி இழக்க பாராளுமன்ற உறுப்பினர்களின் 2/3 வாக்குகள்

கிழக்கிலங்கை அத்தாட்சிப் பத்திரங்களை

# கொழும்பு கடவுச்சீட்டு அலுவலகம் புறக்கணிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கிலங்கை மேலதிக மாவட்டப் பதிவாளரினால் வழங்கப்படும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைக் கொழும்பு கடவுச்சீட்டு அலுவலகம் ஏற்க மறுத்து வருவதாகத் தெரிய வருகிறது.

இதனால் இப்பகுதி மக்கள் தமது கடவுச் சீட்டுக்களைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டு வருவதாகப் புகாரிடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் கேட்டபோது பிறப்பு, இறப்பு சட்டத்தின்படி வெள்ளைக் கடதாசியில் பிறப்புப் பதிவு வழங்கப்பட்டாலும் அதை அவர்கள் ஏற்கத்தான் வேண்டும். பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் சந்தேகம் இருப்பின் பொதுமக்களைத் திருப்பி அனுப்பாது அவற்றைப் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் உள்ள பிரதியுடன் ஒப்பீட்டுப் பார்க்கமுடியும் எனத் தெரிவித்தார்.

## யானை தாக்கி வயோதிபர் மரணம்

(வவுனியா)

வவுனியா காட்டுப் புறப் பாதையில் சென்றுகொண்டிருந்த கருப்பையா (60) என்ற வயோதிபரை மதம் கொண்ட யானை தாக்கியதால் பலியானார்.

இச்சம்பவம் ஈச்சங்குளம்-பூவரசங்குளம் வீதியில் கடந்த 26 ஆம் திகதி இரவு நிகழ்ந்தது.

கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த இந்நர் காயமடைந்த நிலையில் விடுதலைப் புலிகளினால் முதலுதவி செய்யப்பட்டபோதிலும் அவரின் உயிர் பிரிந்தது. (தி)

காரைநகர் கடற்பரப்பில்

# சிறிலங்கா கடற்படை நடமாட்டம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்பிராந்தியத்தில் சிறிலங்கா கடற்படையினரின் பீரங்கிப் படகுகளின் நடமாட்டம் கடந்த மூன்று தினங்களாக அதிகரித்துள்ளது

இக்கடற்பரப்பில் பல பெரிய சிறிய பீரங்கி கப்பல்கள் தினமும் இரவும் பகலும் வந்து செல்கின்றன. இப்பகுதியில் தொடர்ச்சியான ரோந்து நடவடிக்கைகளும், இடம்பெற்று வருகின்றன. மேலும் இப்பகுதியில் சிறிலங்கா விமானப் படையினரது சீப்பிளேன் ஒன்றும், ஹெலிகொப்டர் ஒன்றும் தினமும் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. (க)

# சோவியத் துண்டு படுவதை அனுமதிக்க வேண்டாம்

சோவித் யூனியனில் நாடு துண்டாடப்பட்டு விடுதலை கோருவதை அனுமதிக்க வேண்டாம் என ரஷ்யகுடியரசும் உக்கிரேனிய குடியரசும் அனைத்து சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்ட குடியரசுகளையும் கேட்டுக்கொண்டுள்ளன.

நேற்று உக்ரேனிய குடியரசு தலைவர்களும் ரஷ்யகுடியரசு தலைவர்களும் இணைந்து நடாத்திய ஒரு சந்திப்பில் இந்த கூட்டறிக்கை ஒன்று விடுக்கப்பட்டது

மேலும் இந்த சந்திப்பில் இரு குடியரசுகளும் ஆயுதப் படைகளை கூட்டாக அமைத்துக் கொள்ளவும் பிராந்திய பாதுகாப்பை கூட்டாக ஏற்பாடு செய்து கொள்ளவும் உடன்பாடு காணப்பட்டது.

# மார்க்ஸ் சிலை அகற்றியது வெட்கக்கேடான செயல்

(கொழும்பு)

சோவியத் யூனியனில் கம்யூனிசத்தின் பிதாமகர்களான மார்க்ஸினதும், லெனினுடையதும் சிலைகள் அகற்றப்பட்டமை வெட்கக்கேடான ஒரு

## அனுமதிக்க வேண்டாம்

சோவித் யூனியனில் நாடு துண்டாடப்பட்டு விடுதலை கோருவதை அனுமதிக்க வேண்டாம் என ரஷ்யகுடியரசும் உக்கிரேனிய குடியரசும் அனைத்து சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்ட குடியரசுகளையும் கேட்டுக்கொண்டுள்ளன.

நேற்று உக்ரேனிய குடியரசு தலைவர்களும் ரஷ்யகுடியரசு தலைவர்களும் இணைந்து நடாத்திய ஒரு சந்திப்பில் இந்த கூட்டறிக்கை ஒன்று விடுக்கப்பட்டது

மேலும் இந்த சந்திப்பில் இரு குடியரசுகளும் ஆயுதப் படைகளை கூட்டாக அமைத்துக் கொள்ளவும் பிராந்திய பாதுகாப்பை கூட்டாக ஏற்பாடு செய்து கொள்ளவும் உடன்பாடு காணப்பட்டது.


இலங்கை

பல்கலைக்கழகங்களிற்கான

வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

கல்வியாண்டு 1991/1992

யாழ்ப்பாண, பேராதனை

பல்கலைக்கழகங்களிற்கான

கலை முதற் தேர்வு - G.A.Q.

வணிக முதற் தேர்வு - 1st In Com.

ஆகிய தேர்வுகளிற்கான பதிவுகள் 01-09-91 முதல் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. க.பொ.த. உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

சிரேஷ்ட பதிவாளர்

விக்னா கல்வி நிலையம்

52, ஸ்ரான்லி றோட்,

யாழ்ப்பாணம்.

மு. குறிப்பு பட்டப்படிப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த எமது நிறுவன விரிவுரையாளர்களும் College of Higher Study, Anaipanthi விரிவுரையாளர்களும் ஒருங்கிணைந்த சேவை.

(B/3003)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா விதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


டுள்ளதாகவும், அவர் இனிமேல், பிரித்தானியாவுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் என்றும் இந்த அதிகாரி கூறினார்.

பிரிட்டனைவிட்டு வெளியேறியதன் மூலம் நடுநிலை ஆலோசகர் குழுவிற்கு மனுச் செய்யும் உரிமையைக இட்டு இழந்துவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### சிறிலங்கா

கைச்சாத்திட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. அதே வேளை சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதில் கையொப்பம் இடவில்லை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மகஜரில் சுமார் 40—50 இடைப்பட்ட ஐ. தே. கட்சி உறுப்பினர் கைச்சாத்திட்டிருக்கலாம் எனத் தெரிய வருகின்றது.

இம்மகஜரில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றிய விபரங்கள் எவையும் உத்தியோகபூர்வமாக வெளிவரவில்லை ஆயினும் அதிகார துஷ்பிரயோகம், வடக்கு-கிழக்கு பிரச்சினையைத் தீர்க்கத்தவறியமை, ஊழல் போன்ற விடயங்கள் குற்றச்சாட்டுகளாக இடம்பெற்றுள்ளதாக உத்தியோகபூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

### ஜனாதிபதிக்கு

என்று சபாநாயகரிடம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்-

இது சம்பந்தமாக நேற்றைய யாநாட்டில் பேசிய ரணில் விக்கிரமசிங்க தாம் ஏனைய அமைச்சர்களுடனும் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்து பேசிய போது தாம் எவரும் இத்தகைய ஒரு குற்றச்சாட்டு அறிக்கையில் கையொப்பம் இடவில்லை என்று கூறியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இறுதியாக இத்தகைய ஒரு தீர்மானம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. (ஈ)

### வவுனியாவின்

உட்படுத்தப்பட்ட பெண்கள் காயங்களுடன் காணப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முதல் நாளும் ஆறு பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர் என்பது தெரிந்ததே. (தி)

### பாராளுமன்ற

சிறிலங்கா ஜனாதிபதி பதவி இழக்க பாராளுமன்ற உறுப்பினர்களின் 2/3 வாக்குகள் தேவை. மொத்தமாக உள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 151 பேர் ஜனாதிபதிக்கு எதிராகவாக்களிக்கவேண்டும். எதிர்க்கட்சியில் மொத்தமாக சுமார் 100 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர் என்பதால் மீதி சுமார் 50 உறுப்பினர்களும் ஆளும்கட்சியைச்சேர்ந்த பிரேமதாசாவுக்கு எதிரான உறுப்பினர்கள் என்று கூறப்படுகிறது.

தனது பதவியைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தைக்கலைத்துவிட்டுப் புதிய பொதுத்தேர்தலை நடாத்த உத்தரவிட நினைத்தாலும் அரசியல் சட்டத்தின்படி அது இயலாத காரியம் என்று கொழும்பில் அரசியல் சட்ட நிபுணர்கள் கூறுகின்றனர்.

தற்போது ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எதிரான தீர்மானத்தில் கையெழுத்திட்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறைந்த பட்சம் அமைச்சரவையின்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரக்கூடும்.

அவ்வாறு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் ஜனாதிபதி தவிர அமைச்சரவை முழுவதும் பதவியிழக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

எது எப்படியானாலும் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியான ஐ. தே. கட்சிக்குப் பெரும்பான்மைப்பலம்இல்லை என்பது தெளிவாகிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யத்தில் சிறிலங்கா கடற்படையினரின் பீரங்கிப் படகுகளின் நடமாட்டம் கடந்த மூன்று தினங்களாக அதிகரித்துள்ளது

இக்கடற்பரப்பில்பல பெரிய சிறிய பீரங்கி கப்பல்கள் தினமும் இரவும் பகலும் வந்து செல்கின்றன. இப்பகுதியில் இடம்பெற்று வருகின்றன. மேலும் இப்பகுதியில் சிறிலங்கா விமானப் படையினரது சீப்பிளேன் ஒன்றும், ஹெலிகொப்டர் ஒன்றும் தினமும் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. (ஈ)

## மார்க்ஸ் சிலை அகற்றியது வெட்கக்கேடான செயல்

கொழும்பு)

சோவியத் யூனியனில் கம்யூனிசத்தின் பிதாமகர்களான மார்க்ஸினதும், லெனினுடையதும் சிலைகள் அகற்றப்பட்டமை வெட்கக்கேடான ஒரு செயல் என்று சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது

அண்மையில் சோவியத்தில் சதிப்புரட்சியின் பின்னர் மாஸ்கோ நகரில் இருந்த மார்க்ஸ், லெனின் ஆகியோரின் சிலைகள் குடியரசுகளினால் உடைத்து வீழ்த்தப்பட்டமை தெரிந்ததே.

### ஆறு வருட

உறுதியளிக்கப்பட்டது ஆனால் முஸ்லிம் பகுதிக்கு மட்டுமே இது வழங்கப்பட்டது. தமிழ்ப்பகுதிக்கு தொடர்ந்தும் வழங்கப்படாது புறக்கணிக்கப்பட்டு வருவது வேதனை தருகிறது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### அமைச்சர்கள்

படைஅதிகாரிகளையும்பொலிஸ்மா அதிபரையும் கூட்டி கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

இந்த கூட்டத்தில் பிரேமதாசா பேசும் போது எம் போன்ற நாடுகளில் அரசியல் பொருளாதார சமூக பிரச்சினைகள் தோன்றுவது இயற்கையே என்றார் மேலும் அவர் எந்தவித பிரச்சனைகள் எழுந்தாலும் மக்கள் சேவைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

அத்துடன் அவர் அரசியல் யாப்பில் கூறப்பட்டிருக்கும் விடயங்களைஆதாரம் காட்டி நாட்டில் நெருக்கடி நிலை தோன்றும் போது எவ்வாறு செயற்படவேண்டும் என்று அதில் தெளிவாக கூறப்பட்டுள்ளது என்று வலியுறுத்தி கூறினார்.

இதற்கு முப்படைகளின் ஒத்துழைப்பும் தமக்கு தருவதாக இராணுவம், கடற்படை விமானப்படை அதிகாரிகள் உறுதி வழங்கி ஒரு பத்திரிகை அறிக்கையை விடுத்திருப்பதாகவும் அவர் நேற்றையகூட்டத்தில் கூறினார்.

### 90, 0 0 அரச

அமைச்சு ஈடுபட்டுள்ளது.

அரசுக்கு ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகாரணமாக வீண்விரயத்தைத் தவிர்க்கும் நடவடிக்கை என்று காரணம் கூறி இவ்வாறான நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டு வருவதாக அரசசேவையில் உள்ள உயர் அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ஈ)

### மணலாற்றில்

முப்பது நிமிடங்கள் வரை நீடித்த இக்குண்டு வீச்சில் பல வீடுகள் சேதமடைந்தன. மீண்டும் நேற்று அதிகாலை 1.15 இற்கு இப்பகுதிக்கு வந்த விமானம் ஐந்து பீப்பாக் குண்டுகளை வீசியது. தொடர்ந்து 3.20 ற்கு மேலும் ஐந்து குண்டுகளை வீசியது இதனால் மணலாறு மாவட்டத்தில் பல பகுதிகளிலும் பொதுமக்களின் சொத்துக்கள் பெருமளவில் சேதமாக்கப்பட்டுள்ளன தொடர்ச்சியான குண்டுவீச்சினால் அச்சமடைந்த மக்கள் அப்பகுதிகளை விட்டு வெளியேறி வருகின்றனர்.